# தேவனுடைய திட்டம் என்ன?

I. *தேவன் ஆபிரகாமிடம் வெளிப்படுத்திய திட்டம் என்ன?*

1. *ஆபிரகாமை ஒரு பெரிய ____________________ ஆக்குவதாகத் தேவன் வாக்களித்தார். ஆதி. 12:1, 2*
2. *பூமியில் உள்ள வம்சங்களெல்லாம் அவர் மூலமாக ____________________ ஆதி. 12:3*
3. *சந்ததியான ____________________ வின் மூலம் ஆசீர்வாதம் வந்தது. ஆதி. 22:18; கலா. 3:16*

II. *மாபெரும் இனம் எவ்விதம் பலுகி பெறுகினது?*

1. *____________________ என்று பெயர் மாற்றப்பட்ட யாக்கோபை (ஆதி. 32:28) ____________________ தேசத்தில் ஒரு பெரிய இனமாக்குவதாகத் தேவன் வாக்களித்தார். ஆதி. 46:2, 3*
2. *எகிப்துக்குச் சென்ற ____________________ எண்ணிக்கையிலானவர்களில் இருந்து (யாத். 1:5) இஸ்ரவேலர்கள் புறப்படும் பொழுது, லேவிகோத்திரத்தின் ____________________ ஆண்கள் தவிர (எண். 3:39) ____________________ யுத்த வீரர்கள் எகிப்திலிருந்து வெளி வந்தார்கள். எண். 1:45, 46*

III. *இஸ்ரவேல் நாட்டின் சட்டமாயிருந்தது எது?*

1. *அவர்களின் சட்டமானது ____________________ (உபா. 4:2, 5) அவர்களுக்கு ஒரு ____________________ மக்கள் என்ற வகையில் (உபா. 4:7, 8) கட்டளையிடப்பட்டது.*
2. *இந்த சட்டத்தை அவர்கள் உரிமையாக்கிக் கொள்ளும் ____________________ கடைப்பிடிக்க வேண்டியிருந்தது. உபா. 4:5*
3. *தேவன் பத்துக் கட்டளைகள் என்ற ____________________ யும் அவர்களுடன் ஏற்படுத்தினார். உபா. 4:13*
4. *உடன்படிக்கையை அவர்கள் கடைப்பிடித்தால் அவர்கள் ____________________, ____________________, ____________________ தேவன் கிருபை அருளுவார். உபா. 5:33*
5. *உடன்படிக்கையை அவர்கள் மீறினால் (லேவி. 26:14, 15) தேவன் இனங்களுக்குள் அவர்களைச் ____________________ அவர்கள் தேசத்தைப் பாழாக்குவார். லேவி. 26:33*

IV. *முதல் உடன்படிக்கையில் இருந்த பிரச்சனை என்ன? எபி. 8:6, 7*

1. *நியாயப்பிரமாணத்தின் கீழ் இருந்தவர்கள் ____________________ கீழ் இருந்தார்கள். கலா. 3:10*
2. *அது ____________________ மற்றும் ____________________ ஊழியமாய் இருந்தது. 2 கொரி. 3:6, 7, 9*
3. *அதை மீறியவர்கள் ____________________ பெறாமல்*

*இறந்தார்கள். எபி. 10:28*

V. *இரக்கத்தை அருளுவதற்குத் தேவன் என்ன செய்வார்?*

1. *தேவன் முதலாம் உடன்படிக்கையைப் போல் ____________ ஒரு ____________ உடன்படிக்கையை வாக்களித்தார். எரே. 31:31, 32*
2. *தேவன் இரண்டாம் உடன்படிக்கையின் கீழ், தாம் ____________ இருப்பதாகக் கூறினார். எபி. 8:12*
3. *இயேசு ____________ உடன்படிக்கையின் கீழ், மீறுதல்களுக்காக மரித்தார். எபி. 9:15*
4. *இயேசுவின் ____________ புதிய உடன்படிக்கை உறுதிப் படுத்தப்பட்டது. எபி. 9:16, 17*
5. *இரண்டாவதை ____________ அவர், முதலாவதை ____________. எபி. 10:9*
6. *இரண்டாம் உடன்படிக்கை மேன்மையானதாகவும் ____________ வாக்குத்தத்தங்கள் உடையதாகவும் இருக்கின்றது. எபி. 8:6; 1 பேது. 1:3, 4*

Copyright 1987 Gospel Light Pub. Co. Delight, AR 71940



***பாடத் தாளை எடுத்துரைத்தல்:***

# "தேவனுடைய திட்டம் என்ன?"

*"தேவனுடைய திட்டம் என்ன?" என்ற பாடத் தாளை ஒரு தொடக்கப் பாடத் தாளாகப் பயன்படுத்த முடியும், அல்லது இது, "பாவம் மற்றும் மரணம் ஆகியவற்றின் ஆதார மூலம் எது" என்ற பாடத் தாளைத் தொடர்ந்து வர முடியும்.*

### நோக்கம்

தொடக்கத்திலிருந்தே தேவன் ஒரு திட்டத்தைக் கொண்டிருந்தார் என்று காண்பித்தலே "தேவனுடைய திட்டம் என்ன?" என்ற பாடத் தாளின் நோக்கமாக உள்ளது. இந்தப் பாடத்தில் ஆசிரியர், பழைய ஏற்பாடு என்பது இஸ்ரவேல் இனம் என்ற ஒரு இனத்தைச் சேர்ந்த மக்களுக்கு வழி காட்டுதலை அளித்தது மற்றும் புதிய ஏற்பாடு என்பது கிறிஸ்தவர்களுக்கு வழிகாட்டியாக உள்ளது என்று காண்பிக்க முடியும்.

### பாடச் சுருக்கம்

ஆபிரகாமை ஒரு பெரிய இனமாக்கி அவரது சந்ததியான கிறிஸ்துவுக்குள் பூமியின் சகல இனங்களையும் ஆசீர்வதித்தல் என்ற தமது திட்டத்தை, தேவன் ஆபிரகாமிடம் வெளிப்படுத்தினார். இந்த இனம் எகிப்தில் வளர்ந்து மேம்பட்டது. அவர்களுக்குத் தேவன் சீனாய் மலையில் மோசேயின் மூலமாக ஒரு நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தார். இந்த நியாயப்பிரமாணம் அவர்களுக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டு வரவில்லை, அதற்குப் பதிலாக அவர்களை ஒரு சாபத்தின் கீழ் வைத்தது. தேவன் வாக்களித்திருந்தபடி, இயேசுவின் மூலமாகவே ஆசீர்வாதம் வந்தது.

---

### அறிமுகம்

*[ஆசிரியர் முதலில் "பாவம் மற்றும் மரணம் ஆகியவற்றின் ஆதாரமூலம் எது?" என்ற பாடத் தாளைப் பயன்படுத்தியிருந்தால், அவர் அந்தப் பாடத்தாளை (இப்பொழுது) சுருக்கமாய் மீள்பார்வையிட வேண்டும்.]* ஆதாம் ஏவாள் மூலமாக பாவம் இவ்வுலகினுள் வந்தது. இது நடக்கும் என்று தேவன் முன்னமே அறிந்திருந்தார், எனவே பாவமன்னிப்பைக் கொண்டு

வரக் கூடிய திட்டம் ஒன்றை அவர் ஏற்கனவே வகுத்து வைத்திருந்தார். தேவனுடைய அந்தத் திட்டத்தை இந்தப் பாடம் எடுத்துரைக்கும்.

## I. திட்டம் வெளிப்படுத்தப்பட்டது

*1.* தேவனுடைய திட்டத்தைக் கவனிப்பதில், நாம் வேதாகமத்தின் தொடக்கப் பகுதிக்கு நெருங்கி, வேதாகமத்தின் தொடக்கத்தின் வெகு அருகாமையிலிருந்து தொடங்க வேண்டும். ஆபிரகாம் என்று பிற்பாடு பெயர் மாற்றப்பட்ட ஆபிராமிடம் தேவன் தமது திட்டத்தை வெளிப் படுத்தினார். (ஆதி. 17:5; "ஆபிராம்" என்றால் "மேன்மையான தந்தை" என்று அர்த்தமாகும் மற்றும் "ஆபிரகாம்" என்றால் "திரளான இனங்களின் தந்தை" என்று அர்த்தமாகும்.)

தேவனுடைய வாக்குத்தத்தத்தில் இரு முக்கிய அம்சங்கள் உள்ளடங்கி யிருந்தன. ஆபிராம் தம் சொந்த நாட்டை விட்டு வந்தால் அவருக்கு என்ன செய்வதாகத் தேவன் வாக்களித்தார்? [ஆதி. 12:1, 2ஐ வாசிக்கவும்.] தேவன் ஆபிராமை ஒரு பெரிய எதுவாக்குவதாக வாக்களித்தார்? [கோடிட்ட இடத்தில் "இனம்" என்று எழுதி நிரப்பவும்.]

*2.* தேவன் இன்னொரு பெரிய வாக்குத்தத்தத்தையும் உள்ளடக்கினார். அது என்னவாக இருந்தது? [ஆதி. 12:3ஐ வாசிக்கவும்.] ஆபிராமின் மூலம் பூமியில் உள்ள சகல இனங்களுக்கும் என்ன செய்யப்படும்? [கோடிட்ட இடத்தில் "ஆசீர்வதிக்கப்படும்" என்று எழுதி நிரப்பவும்.]

[பாடத் தாளின் பின்புறம் "ஆபிரகாம்" என்றெழுதி, பின்பு 1. "இனம்" மற்றும் 2. "ஆசீர்வாதம்" என்று எழுதவும். (பக்கம் 160யைப் பார்க்கவும்)]

*3.* ஆசீர்வாதம் ஆபிரகாமின் மூலமாக வருவதாயிருப்பினும், அது ஆபிரகாமினால் அருளப்படுவதாய் இராது. இது எவ்வாறு நிறைவேற்றப் படும்? [ஆதி. 22:18 மற்றும் கலா. 3:16 ஆகிய வசனங்களை வாசிக்கவும்.] ஆபிரகாமின் ஒரு சந்ததி மூலமாக ஆசீர்வாதம் அளிக்கப்பட வேண்டிய தாயிருந்தது. அந்த சந்ததி யார்? [கோடிட்ட இடத்தில் "கிறிஸ்து" என்று எழுதி நிரப்பவும்.] கிறிஸ்து கொண்டு வருவதாய் இருந்த ஆசீர்வாதம் இஸ்ரவேல் இனத்திற்கானதாக மட்டுமின்றி பூமியின் சகல இனங் களுக்குமானதாக இருந்தது. [பாடத் தாளின் பின்புறத்தில் "ஆசீர்வாதம்" என்பதிலிருந்து தாளின் மையப் பகுதி வரையிலும் ஒரு கோட்டை வரைந்து, அங்கு "சந்ததி" என்று எழுதவும். பின்பு தாளின் வலது புறம் நோக்கி ஒரு வளைகோடு வரைந்து, அங்கு சிலுவையின் படம் ஒன்றை வரையவும். (பக்கம் 160ஐப் பார்க்கவும்)]

ஆபிரகாமுக்கு அருளப்பட்ட இந்த இரண்டு வாக்குத்தத்தங்களின் அடிப்படையில் வேதாகமம் இரு பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஆபிரகாமிடத்திலிருந்து வளர்ந்து பெருகின இனத்தைப் பற்றியதே பழைய ஏற்பாட்டின் முக்கிய அக்கறையாகவும், இயேசு கிறிஸ்துவின் மூலம் வர முடிந்த ஆசீர்வாதங்கள் பற்றியதே புதிய ஏற்பாட்டின் அக்கறையாகவும் உள்ளன. இனம் என்பது பற்றி வாசிக்க ஒருவர் விரும்புவாரென்றால், அவர் பழைய ஏற்பாட்டில் அதை வாசிப்பார். ஆசீர்வாதம் என்பது பற்றி வாசிக்க ஒருவர் விரும்புவாரென்றால், அவர் புதிய ஏற்பாட்டில் அதை வாசிப்பார்.

## II. **இனத்தின் வளர்ச்சி**

*1. ஆதியாகமம் புத்தகத்தின் எஞ்சியுள்ள பகுதியானது அந்த மாபெரும் இனத்தின் வளர்ச்சிக்கு வழி நடத்திய நிகழ்ச்சிகளைப் பற்றியதாக உள்ளது. இந்த மாபெரும் இனத்தின் வளர்ச்சியில், யாக்கோபு மிக முக்கியமான மனிதராவார் என்ற காரணத்தினால், தேவன் அவரது பெயரை மாற்றினார்.* [ஆதி. *32:28*ஐ வாசிக்கவும்.] யாக்கோபின் பெயரை தேவன் *என்னவென்று மாற்றினார்?* [கோடிட்ட இடத்தில் "இஸ்ரவேல்" என்று எழுதி நிரப்பவும். இது "தேவனோடு போராடியவர்" என்று அர்த்தப்படும்.] *இஸ்ரவேலின் பிள்ளைகள் என்பவர்கள் யாக்கோபின் சந்ததியார்களாய் உள்ளனர். இந்தக் கருத்தை நீங்கள் வேதாகமத்தை வாசிக்கையில் உங்கள் சிந்தையில் வைக்கவும். இஸ்ரவேலின் இனம் மற்றும் பிள்ளைகள் என்பவர்கள் யாக்கோபின் சந்ததியாராய் இருந்தனர்.* [பாடத் தாளின் பின்புறத்தில் "ஆபிரகாம்" என்பதற்குக் கீழே அம்புக் குறியிட்டு "ஈசாக்கு" என்று எழுதவும், மற்றும் இவர் ஆபிரகாமின் மகன் என்று விளக்கம் தரவும். பின்பு அதன் கீழ் அம்புக் குறியிட்டு "யாக்கோபு (இஸ்ரவேல்)" என்று எழுதி, இவர் ஈசாக்கின் மகன் என்று விளக்கம் தரவும். யாக்கோபின் பெயருக்குக் கீழே அம்புக் குறியிட்டு "*12*" என்று எழுதி, யாக்கோபு பன்னிரெண்டு மகன்களைப் பெற்றிருந்தார், அவர்கள் மூலம் இஸ்ரவேலின் பன்னிரெண்டு கோத்திரங்களும் வந்தன என்று விளக்கம் தரவும்.]

[இந்த வேளையில், யாக்கோபின் மகன்கள் தங்களின் சகோதரனான யோசேப்பை வர்த்தகர்களிடம் விற்றதையும், அவர்கள் அவரை எகிப்துக்குக் கூட்டிச் சென்றதையும் ஆசிரியர் விளக்கப்படுத்த வேண்டும். அவர் (யோசேப்பு) போத்திபாரிடத்தில் ஊழியக்காரனாய் இருந்து, போத்திபாரின் மனைவியால் பொய்க் குற்றம் சாட்டப்பட்ட பிறகு, சிறையில் அடைக்கப்பட்டார், அங்கு அவர் சமையல்காரன் மற்றும் திராட்ச இரசம் தயாரிப்பவன் ஆகியோரின் கனவுகளுக்கு விளக்கம் தந்தார். பிற்பாடு திராட்ச இரசம் தயாரிப்பவன், கனவுகளால் இடர்ப்பாடு அடைந்த பார்வோனிடம், அவனது கனவுக்கு யோசேப்பினால் விளக்கம் தர முடியும் என்று கூறினான். யோசேப்பு பார்வோனின் கனவுக்கு விளக்கம் தந்ததினால், வரப் போகிற பஞ்சமான ஏழு ஆண்டுகளுக்குத் தானியத்தைப் பத்திரப்படுத்தும் வகையில் உணவுப் பொருட்களை வளமான ஏழு ஆண்டுகளில் சேகரித்து வைக்கும் பொறுப்பு அவரிடத்தில் ஒப்படைக்கப் பட்டது.

பஞ்சம் வந்த பொழுது, யோசேப்பின் சகோதரர்களைத் தானியம் வாங்கி வரும்படி யாக்கோபு எகிப்துக்கு அனுப்பி வைத்தார். தானியம் வாங்குவதற்காக இரண்டாம் முறையாக அவர்கள் எகிப்துக்கு வந்த பிறகு, அவர்களிடத்தில் யோசேப்பு, தாம் அவர்களின் சகோதரன் என்பதை வெளிப்படுத்தினார். அவர்களின் தந்தையை எகிப்துக்கு அழைத்து வரும்படி அவர் (யோசேப்பு) கூறினார். அவர்கள் யாக்கோபிடம் எகிப்துக்கு வருமாறு கூறிய பொழுது, யாக்கோபு எகிப்துக்குச் செல்வதா வேண்டாமா என்று முடிவெடுக்க வேண்டியதாயிற்று. இதை அவர் யோசித்துக் கொண்டிருக்கை யில் தேவன் அவருக்குத் தோன்றினார்.]

*தேவன் யாக்கோபிடம் என்ன கூறினார்?* [ஆதி. 46:2, 3ஐ வாசிக்கவும்.] *யாக்கோபின் சந்ததியார் எந்த நாட்டில் ஒரு பெரிய இனமாகப் பலுகுவார்கள்?* [கோடிட்ட இடத்தில் "எகிப்து" என்று எழுதி நிரப்பவும். பாடத் தாளின் பின்புறத்தில் ஒரு சதுரம் வரைந்து அதற்குள் "எகிப்து" என்று எழுதவும். (பக்கம் 160ஐப் பார்க்கவும்)]

*2. யாக்கோபு தம் மகன்கள் யாவரையும் மற்றும் அவர்களின் பிள்ளைகளையும் எகிப்துக்கு அழைத்துச் சென்றார்.* அவருடன் எத்தனை பேர் சென்றார்கள்? [யாத். 1:5ஐ வாசிக்கவும்.] *யாக்கோபுடன் எகிப்துக்கு வந்தவர்கள் எத்தனை பேர்?* [கோடிட்ட இடத்தில் "70" என்று எழுதி நிரப்பவும்.]

*இவர்கள் மிக விரைவில் பலுகிப் பெருகினார்கள்* [யாத். 1:7-9.] மோசே அவர்களை எகிப்திலிருந்து புறப்படச் செய்த பிறகு, மக்களைத் தொகையிடும்படி மோசேயும் ஆரோனும் கட்டளை பெற்றார்கள். இந்த மக்கள் தொகை கணக்கெடுப்பில் யாரெல்லாம் உள்ளடக்கப்பட வேண்டியிருந்தது? [எண். 1:1-3ஐ வாசிக்கவும்.] *அவர்களுடைய சேனையில் எத்தனை ஆண்கள் இருந்தனர்?* [எண். 1:45, 46ஐ வாசிக்கவும்.] சேனையில் எத்தனை பேர் இருந்தார்கள் [கோடிட்ட இடத்தில் 603,550 என்று எழுதி நிரப்பவும்.] *இந்த எண்ணிக்கையில் யார் சேர்க்கப்படவில்லை, மற்றும் ஏன்?* [எண். 1:45-50ஐ வாசிக்கவும்.] இந்த மக்கள் தொகையில் லேவியர்கள் யுத்த வீரர்களுடன் உள்ளடக்கப்படவில்லை, ஏனென்றால் அவர்கள் இஸ்ரவேல் இனத்தின் மதத் தொடர்பான விஷயங்களைக் கவனிக்க வேண்டியிருந்தது.

*லேவியர்களில் எத்தனை பேர் இருந்ததாகக் கணக்கிடப்பட்டனர்?* [எண். 3:39ஐ வாசிக்கவும்.] [கோடிட்ட இடங்களில் "22,000" மற்றும் தாளின் பின்பக்கம் "603,550" மற்றும் "22,000" பேர் எகிப்திலிருந்து போனார்கள் என்று எழுதி நிரப்பவும்.(பக்கம் 160ஐ பார்க்கவும்)] இஸ்ரவேலில் 603,550 யுத்த வீரர்களும், லேவிகோத்திரத்தில் 22,000 ஆண்களும் இருந்தனர். இவ்வளவு யுத்த வீரர்களும், இவ்வளவு ஆசாரியர்களும் கொண்டிருந்த அந்த இனத்தின் முழுமையான மக்கள் தொகையானது முப்பது முதல் ஐம்பது இலட்சம் வரை இருந்திருக்க வேண்டும் என்று பல்வேறு மதிப்பீடுகள் எடுத்துரைக்கின்றன.

இஸ்ரவேல் என்ற இனமானது கானான் நாட்டில் ஒரு சிறு தொடக்கத்திலிருந்து தேவன் வாக்களித்திருந்தபடி மிகப் பெரும் திரள் கூட்டமாகப் பலுகிப் பெருகிற்று. [உங்களிடம் ஒரு வரைபடம் இருந்தால், ஆபிரகாம் பலஸ்தீன நாட்டிற்குப் பயணமானது மற்றும் அவரது சந்ததியார் எகிப்திற்கும் பிறகு சீனாய் மலைக்கும் சென்றது ஆகியவற்றை அதில் கண்டறியவும்.]

## III. (இஸ்ரவேல்) நாட்டிற்கு/இனத்திற்குச் சட்டம்

*1. இஸ்ரவேலின் (யாக்கோபின்) சந்ததியார் எகிப்துக்கு வருவதற்கு முன்பு, அவர்கள் ஒரு சிறு குடும்ப மக்களாயிருந்தார்கள் மற்றும் ஒரு இனம் என்ற வகையில் அவர்களுக்குச் சட்டமெதுவும் தேவைப்பட்டிருந்ததில்லை. அவர்கள் எகிப்தில் இருக்கையில், எகிப்தியரின் சட்டங்களைக் கடைப்*

பிடித்து வாழும்படி கட்டாயப்படுத்தப்பட்டிருந்தார்கள். ஆனால் இப்பொழுது அவர்கள் ஒரு சுயாதீனமுள்ள இனமாக வளர்ந்து மக்கள் எண்ணிக்கையில் பெருகியிருப்பார்கள், அவர்களுக்குத் தங்கள் இனம்/நாடு என்பதற்கான சட்டம் தேவைப்பட்டது.

சட்டத்தை அவர்களுக்குக் கொடுத்தவர் யார்? [உபா. 4:2, 5ஐ வாசிக்கவும்.] அவர்களுக்கு மோசே யாருடைய சட்டத்தைக் கொடுத்தார்? [கோடிட்ட இடத்தில் "கர்த்தருடையது" என்று எழுதி நிரப்பவும்.] இது உலகம் முழுவதற்குமான சட்டமாய் இருந்ததில்லை, ஆனால் அவர்களுக்கு மட்டுமே உரியதாக இருந்தது. [உபா. 4:7, 8ஐயும் மற்றும் சங். 147:19, 20ஐயும் வாசிக்கவும்.] அது அவர்களுக்கு எந்த வகையில் சட்டமாக இருந்தது? [கோடிட்ட இடத்தில் "இனம்/நாட்டு" என்று எழுதி நிரப்பவும்.] தேவன் அவர்களுக்குக் கொடுத்திருந்த இந்த நாட்டுச் சட்டமானது அவர்களுக்கு மதரீதியான மற்றும் ஒழுக்க ரீதியான சட்டமாகவும் இருந்தது.

2. இந்த சட்டத்தை அவர்கள் எங்கு கடைப்பிடிக்க வேண்டியிருந்தது? [உபா. 4:5ஐ வாசிக்கவும்.] அவர்கள் இதை எவ்விடத்தில் கடைப் பிடிக்க வேண்டியிருந்தது? [கோடிட்ட இடத்தில் "நாட்டில்" என்று எழுதி நிரப்பிக் கொள்ளவும்.] இந்தச் சட்டத்தின் இயல்பே, இது பூமியின் மற்ற குடிகளுக்கான சட்டமல்ல ஆனால் அதற்கு மாறாக இது இஸ்ரவேல் நாட்டில் வாழ்ந்த மக்களுக்கான சட்டமாயிருந்தது என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது.

இஸ்ரவேல் நாட்டிலிருந்து ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் வாழ்ந்தவர்களுக்கு இந்தச் சட்டம் உண்டாக்கும் பிரச்சனைகளைக் கவனித்துப் பாருங்கள். (யூத இனத்தின்) சகல ஆண்களும் தேவன் தேர்ந்து கொண்ட இடமான எருசலேமிற்கு, ஆண்டிற்கு மூன்று முறை வர வேண்டியிருந்தது (உபா. 16:16). இந்த இடத்தில்தான் அவர்கள் தேவனை நாடி, தசம பாகத்தையும் காணிக்கை/பலிகளையும் கொண்டு வர வேண்டியதாயிருந்தது (உபா. 12:5-11; 14:22-25). சட்டரீதியான விஷயங்கள் அந்த இடத்தில்தான் முடிவு செய்யப்பட வேண்டியிருந்தன (உபா. 17:8, 9). மனிதரைக் கொலை செய்தவன் எவனும் இஸ்ரவேலில் இருந்த அடைக்கல நகர்கள் ஆறில் ஏதாவது ஒன்றிற்கு ஓடி ஒளிய வேண்டிய தாயிருந்தது (எண். 35:6). இது இஸ்ரவேலர்கள் தங்களின் நாட்டில் கீழ்ப்படிவதற்கான சட்டமாய் இருந்தது.

3. அவர்களின் சட்டங்கள் மற்றும் நியாயத்தீர்ப்புகள் ஆகியவற்றிற்கு அப்பால், அவர்களின் சட்டமானது இன்னொரு அம்சத்தையும் கொண்டிருந்தது. இது எவற்றை உள்ளடக்கியிருந்தது? [உபா. 4:13, 14 ஐ வாசிக்கவும்.] தேவன் அவர்களுடன் எதனை ஏற்படுத்தினார்? [கோடிட்ட இடத்தில் "உடன்படிக்கை" என்று எழுதிக் கொள்ளவும். பாடத் தாளின் பின்புறத்தில் மலை ஒன்றின் படம் வரைந்து அதை "சீனாய் மலை" என்று குறிப்பிடவும், மற்றும் அதன் கீழ், ''உடன்படிக்கை'' என்றும் பிறகு ''பத்துக்கட்டளைகள்'' என்றும் எழுதிக் கொள்ளவும். (பக்கம் 160ஐப் பார்க்கவும்)]

உடன்படிக்கை என்றால் என்ன? உடன்படிக்கை என்பது ஒரு

முறையான ஒப்பந்தம் ஆகும். தேவன் இஸ்ரவேலுடன் ஒரு ஒப்பந்தத்தை, ஏற்படுத்தினார். பத்துக் கட்டளைகளைக் கடைப்பிடித்தல் என்பது அந்த ஒப்பந்தத்தில் இஸ்ரவேலரின் பொறுப்பாக இருந்தது.

*4. உடன்படிக்கையின் அந்த பாகமான பத்துக் கட்டளைகளைக் கடைப்பிடித்து நடந்தால் இஸ்ரவேலருக்கு என்ன செய்வதாக தேவன் ஒப்பந்தம் செய்தார்? [உபா. 5:33ஐ வாசிக்கவும்.] பத்துக் கட்டளையை அவர்களுக்குத் தந்த பிறகு இதைத்தான் அவர் வாக்களித்ததாக இருக்கின்றது (உபா. 5:1-21). இதை அவர்கள் கடைப்பிடித்து நடந்தால் அவர்களுக்கு என்ன செய்வதாக வாக்களித்தார்? அவர்கள் என்னவாக ஆவார்கள்? [கோடிட்ட இடங்களில், "நாட்டில்," "பிழைத்து," "சுகித்து நீடித்திருக்கும் படி" என்று எழுதி நிரப்பவும்.]* இஸ்ரவேலுக்குச் செய்வதாகத் தேவன் தம்மைத் தாமே நிர்ப்பந்தித்துக் கொண்டவற்றைக் கவனியுங்கள். *அவர்களுக்கு உலகப் பிரகாரமான ஆசீர்வாதங்களை அளிப்பதாக அவர் வாக்களித்தார்.*

*5. அவர்கள் உடன்படிக்கையை மீறினால், தேவன் அவர்களுக்கு என்ன செய்வார்? [லேவி. 26:14, 15, 33ஐ வாசிக்கவும்.] அவர்களின் நாடு அவர்களிடமிருந்து பறித்துக் கொள்ளப்படும், மற்றும் என்ன நடக்கும்? [கோடிட்ட இடத்தில் "சிதற அடித்து" என்று எழுதிக் கொள்ளவும்.]* யூத மக்கள் இன்று ஏன் சிதறடிக்கப்பட்டுள்ளார்கள்? தேவன் அவர்களுடன் ஏற்படுத்தியிருந்த உடன்படிக்கையை அவர்கள் மீறியதால் அவர்கள் சிதறடிக்கப்பட்டுள்ளார்கள். இதன் ஒரு பாகமாக, அவர்கள் சிதற அடிக்கப்பட்ட இடங்களில் உள்ள எல்லா மக்களுக்குள்ளும் அவர்கள் ஒரு "பழமொழியாய்" இருக்கின்றார்கள் (உபா. 28:37).

## IV. *பிரச்சனை*

*1.* தேவன் இஸ்ரவேலுக்குக் கொடுத்திருந்த சட்டம் ஒரு நல்ல தராதரம் உள்ளதாக இருந்தது, ஆனால் தேவன் அதனுள் நோக்கம் நிறைந்த வகையில் ஒரு பிரச்சனையைக் கட்டி எழுப்பி வைத்திருந்தார் (எபி. 8:6, 7). அதற்குள்ளாகவே ஒரு பிழை கட்டி வைக்கப்பட வேண்டியிருந்தது.

*நியாயப்பிரமாணத்தில் இருந்த பிழை என்ன? அதைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு அது செய்ததென்ன? [கலா. 3:10ஐ வாசிக்கவும்.] அதன் கீழ் இருந்தவர்கள் எதன் கீழ் இருந்தார்கள்? [கோடிட்ட இடத்தில் "சாபத்தின்" என்று எழுதி நிரப்பவும்.] அவர்கள் ஏன் சாபத்தின் கீழ் இருந்தார்கள்?* அவர்கள் நியாயப்பிரமாணத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் தவறு எதுவும் செய்யாமல் கடைப்பிடிக்க வேண்டியிருந்தது என்ற உண்மையின் கீழ் இருந்தனர் என்ற அடிப்படையில் அவர்கள் சாபத்தின் கீழ் இருந்தார்கள், (கலா. 3:10). ஒருவர் கூட இதைச் செய்திருந்ததில்லை.

*2. இந்தக் காரணத்தினால், அது என்ன வகையான அமைப்பென்று கருதப்பட முடிந்தது? [2 கொரி. 3:6, 7, 9ஐ வாசிக்கவும்.] அது என்ன வகையான ஊழியமாய் இருந்தது? [கோடிட்ட இடங்களில் "மரணத்துக் கேதுவான," "ஆக்கினைத் தீர்ப்புக் கொடுக்கும்" என்று எழுதி நிரப்பவும்.]* நியாயப்பிரமாணத்தை மீறியவர்கள் வழக்கமாக மரண தண்டனை

*பெற்றதால் அது மரணத்துக்கேதுவான ஊழியமாக இருந்தது. நியாயப் பிரமாணத்தைத் திட்டவட்டமாக மீறிய எவருக்கும் மன்னிப்பு அளிப்பதற் கான ஏற்பாடு எதுவும் ஏற்படுத்தப்பட்டிருந்ததில்லை (எண். 15:27-31).*

*3. நியாயப்பிரமாணத்தைத் திட்டவட்டமாய் மீறியவர்களுக்கு என்ன நடந்தது?* [எபி. 10:28ஐ வாசிக்கவும்.] *அவர்கள் எதைப் பெறாமல் சாக வேண்டியதாயிற்று?* [கோடிட்ட இடத்தில் "இரக்கம்" என்று எழுதி நிரப்பவும்.] [*பாடத் தாளின் பின்புறத்தில் (பக்கம் 160ஐப் பார்க்கவும்) மலையின் கீழ்ப்பகுதியில் பின்வருமாறு வரிசையாக எழுதவும்: "1. சாபம்"; "2. மரணம்"; "3. ஆக்கினைத் தீர்ப்பு"; "4. இரக்கம் இல்லை"; "5. கிருபையில்லை (கலா. 5:4)."*] *ஆபிரகாமின் சந்ததியின் மூலம் எல்லா இனங்களையும் ஆசீர்வதிப்பதாகத் தேவன் வாக்களித்திருந்தார், ஆனால் அதற்கு மாறாக, நியாயப்பிரமாணம் ஒரு சாபத்தைக் கொண்டு வந்தது, எனவே தேவன் நியாயப்பிரமாணத்தின் மூலமாக சகல இனங்களையும் ஆசீர்வதிக்கத் திட்டமிடவில்லை என்பது தெளிவு.*

*நியாயப்பிரமாணத்தின் கீழ் வாழ்ந்தவர்கள் ஆசீர்வதிக்கப்படு வதற்குப்பதில் சபிக்கப்பட்டனர் என்றால், நியாயப்பிரமாணத்தின் நோக்கம் என்ன? மீறுதலின் நிமித்தமாக நியாயப்பிரமாணமானது கூட்டப்பட்டு, கிறிஸ்துவிடம் (அவர்களை) அழைத்துவரும் உபாத்தியாய் இருந்தது (கலா. 3:19, 24).*

*நாம் யாராய் இருக்கின்றோமோ, அதனாலேயே நாம் தேவனுக்கு ஏற்புடையவராரவதற்குப் போதிய அளவு நல்லவர்களாய் உள்ளோம் என்று மனித இயல்பில் நம்மில் சிலர் சிந்திப்பதுண்டு. ஒரு கருத்தில் நியாயப் பிரமாணம் என்பது மனிதன் தன்னைத் தானே மீட்டுக் கொள்ள முடியாது ஆனால் அவனுக்கு உதவி தேவை என்பதற்கு ஒரு பரிசோதனையாக இருந்தது.*

*இதை ஒருவர், கானடாவில் ஆரஞ்சை விளையச் செய்ய முடியாது என்று ஃபிளோரிடாவின் விவசாயியை நம்ப வைக்க முயலுகின்ற மனிதருடன் ஒப்பிடலாம். இதைச் செய்வதற்கு, அவர் கானடாவின் வெதுவெதுப்பான பகுதியில் தெற்கு மலைச் சரிவைத் தேர்ந்தெடுத்து ஆரஞ்சுத் தோப்பினை அங்கு ஏற்படுத்தலாம். முன் உறைபனி, பனி மற்றும் தோல்வி என்று வருகின்ற பல ஆண்டுகளுக்குப் பிறகு, அந்த விவசாயி கனாடா நாட்டில் ஆரஞ்சு விளையச் செய்ய முடியாது என்று நம்புகின்றார்.*

*இதே வழிமுறையில், தேவன் விசுவாசம் நிறைந்த ஆபிரகாமைத் தேர்ந்தெடுத்து, அவருடைய சந்ததியாரை பொல்லாத இனங்களிலிருந்து பிரித்தெடுத்து, பிறகு அவர்கள் கடைப்பிடிக்க ஒரு பூரணமான தராதரத்தை அளித்தார் (ரோமர் 7:12). இவ்வுலகில் எந்த மக்களினமாவது தங்கள் சொந்த செயல்களினிமித்தம் நீதிமானாக முடியுமென்றால், அப்படியாவதற்கான மிகச் சிறந்த வாய்ப்புக்களை இஸ்ரவேலரே பெற்றிருந்தார்கள், ஆனால் அவர்கள் யாவரும் பாவம் செய்தார்கள் (ரோமர் 3:9, 10). மனிதன் இதைத் தனது சொந்தமான வகையில் செய்து கொள்ள முடியாது, ஆனால் அதற்கு மாறாக, அவர்களின் பாவங்களை மன்னிக்க தேவனுடைய குமாரனின் மரணம் தேவை என்று தேவன் எல்லாக் காலங்களுக்குமாக நிரூபித்தார்.*

நமது மீறுதல்களை மூடுவதற்கு இரக்கம் அளிக்கக் கூடிய மீட்பர் ஒருவர் நமக்குத் தேவை என்பதைத் தீர்மானமாகச் சுட்டிக்காட்டுவதே நியாயப் பிரமாணத்தின் நோக்கமாய் இருந்தது.

## V. தேவனுடைய திட்டம்

*1. ஆபிரகாமின் சந்ததியொன்றின் வழியாக இவ்வுலகத்தாரை ஆசீர்வதிக்கத் தேவன் திட்டமிட்டிருந்தார். தேவனுடைய இந்தத் திட்டத்தை நியாயப்பிரமாணமானது வியர்த்தமாக்க மாட்டாது (கலா. 3:17) நியாயப்பிரமாணம் ஆசீர்வாதத்தை அளிக்க முடிந்திருக்குமென்றால், இயேசுவின் மரணம் தேவையற்றதாய் இருந்திருக்கும் (கலா. 2:21). இந்த ஆசீர்வாதத்தை அருளும் வகையில் நியாயப்பிரமாணத்தையும் உடன் படிக்கையையும் தேவன் திட்டமிடவில்லை.*

*தேவன் என்ன செய்யத் திட்டமிட்டார்? [எரே. 31:31, 32ஐ வாசிக்கவும்.] தேவன் தாம் என்ன செய்வதாக வாக்களித்தார்? அது அவர் இஸ்ரவேலுடன் செய்த உடன்படிக்கையைப் போல் இருக்குமா? [கோடிட்ட இடங்களில் "அல்ல," "புது" என்ற வார்த்தைகளை எழுதி நிரப்பவும்.]*

*2. புதுஉடன்படிக்கை எதைத் தருவதாயிருக்கும்? [எபி. 8:12ஐ வாசிக்கவும்.] புதிய உடன்படிக்கையின் கீழ் தாம் எப்படிப்பட்டவராய் இருப்பதாகத் தேவன் கூறினார்? [கோடிட்ட இடத்தில் "இரக்கமுள்ள வராய்" என்று எழுதி நிரப்பவும்.]*

*3. முதலாம் உடன்படிக்கையில் இரக்கம் என்பது கட்டியமைக்கப் பட்டிராததால், அவர்கள் இரக்கம் பெற முடியாதிருந்தது என்று அர்த்த மாகுமா? ஆபிரகாமின் மூலம் வாக்களிக்கப்பட்டிருந்த ஆசீர்வாதங்கள் நியாயப்பிரமாணத்தின் அடிப்படையில் இன்றி எதன் அடிப்படையில் அவர்களையும் ஆசீர்வதிக்க முடிந்திருந்தது? [எபி. 9:15ஐ வாசிக்கவும்.] இயேசு எந்த உடன்படிக்கையின் கீழ் நடந்த அக்கிரமங்களுக்காகவும் மரித்தார்? [கோடிட்ட இடத்தில் "முதலாம்" என்று எழுதி நிரப்பிக் கொள்ளவும்.] எவரொருவரும் தேவனிடத்தில் வருதல் என்பது இயேசுவின் மூலமாக மட்டுமே செய்யப்பட முடியும் (யோவா. 14:6). இதுவே எப்பொழுதும் தேவனுடைய திட்டமாக இருந்துள்ளது. உலகத்தின் பாவங்கள் இயேசுவின் இரத்தத்தினால் மட்டுமே மன்னிக்கப்பட முடியும். நியாயப்பிரமாணம் இரக்கத்தையும் மன்னிப்பையும் அருளாதிருந்தது. அது தன் கீழ் இருந்தவர்களுக்கு சாபம் மட்டுமே தந்தது.*

*4. இந்தப் புது உடன்படிக்கை எப்பொழுது அமலுக்கு வந்தது? [எபி. 9:16, 17ஐ வாசிக்கவும்.] இது எப்பொழுது செயல் விளைவுள்ளதாகியது? [கோடிட்ட இடத்தில் "மரணத்தில்" என்று எழுதி நிரப்பவும்.] ஒரு உயிலை எழுதியவர் இறக்கின்ற வரையிலும் அந்த உயிலானது ஒரு இறந்த பத்திரமாகவே உள்ளது. இதே விஷயம் இயேசு கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டைப் பொறுத்தமட்டிலும் உண்மையானதாயிருந்தது. இயேசுவின் மரணம்தான் அதைச் செயல் விளைவுள்ளதாக்கிற்று.*

*5. புது உடன்படிக்கை பழைய உடன்படிக்கைக்குப் பதிலாக*

வைக்கப்பட்டதா? [எபி. 10:9ஐ வாசிக்கவும்.] இரண்டாவதை என்ன செய்யும்படிக்கு அவர் முதலாவதை என்ன செய்தார்? [கோடிட்ட இடங்களில் "நிலைநிறுத்துவதற்கு 'நீக்கிப் போடுகிறார்' " என்று எழுதி நிரப்பவும்.] இயேசு தம் மரணத்தில் இரண்டாம் உடன்படிக்கையை அமலுக்குக் கொண்டு வந்த பொழுது, அவர் முதலாவதை நீக்கிப் போடவும் செய்தார். [பாடத் தாளின் பின்புறத்தில் "சந்ததி" என்று எழுதப்பட்டுள்ள சதுரக் கட்டத்திற்கு மேல், "முதலாம் (பழைய) உடன்படிக்கை" என்றும் அதற்குச் சற்றுத் தள்ளி சிலுவை படத்திற்கு மேற்பகுதியில் "இரண்டாம் (புதிய) உடன்படிக்கை" என்றும் எழுதிக் கொள்ளவும். (பக்கம் 160ஐப் பார்க்கவும்)]

6. இவையிரண்டில் மேன்மையானது எது மற்றும் ஏன்? [எபி. 8:6ஐ வாசிக்கவும்.] இரண்டாம் உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்கள் முதலாம் உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்களுடன் எவ்விதம் ஒப்பிடப் படுகின்றன? இந்த வாக்குத்தத்தங்கள் எப்படிப்பட்டவையாக உள்ளன? [கோடிட்ட இடத்தில் "விசேஷித்த" என்று எழுதிக் கொள்ளவும்.] முதலாம் உடன்படிக்கையைக் கடைப்பிடித்தால் அவர்களுக்கு வாக்களிக்கப் பட்டிருந்தவை யாவை? வளமையுடன் கூடிய நாடு அவர்களுக்கு வாக்களிக்கப்படவில்லையா (உபா. 5:33)? நமக்கு அருளப்பட்டுள்ள விசேஷித்த வாக்குத்தத்தங்கள் யாவை? [1 பேது. 1:3, 4ஐ வாசிக்கவும்.] இஸ்ரவேல் நாட்டில் வளமையுடன் கூடிய நீடிய ஆயுளைக் காட்டிலும் ''பரலோகம்'' என்பது மிகவும் மேன்மையான ஆசீர்வாதமாய் இருப்பதில்லையா?

பழைய உடன்படிக்கையைக் காட்டிலும் புதிய உடன்படிக்கை அருளும் மேன்மையான பயன்கள் யாவை? [பாடத் தாளின் பின்புறத்தில் பழைய உடன்படிக்கை தருபவைகளாக எழுதப்பட்டுள்ளவற்றிற்கு நேராகப் பின்வருமாறு எழுதவும்: "1. ஆசீர்வாதம் (கலா. 3:14)"; "2. ஜீவன் (கலா. 3:21)"; "3. நீதி (கலா. 2:21)"; "4. இரக்கம் (எபி. 8:12)"; "5. கிருபை (யோவா. 1:17)."]

இவ்விரு உடன்படிக்கைகளில் எதின் கீழ் நீங்கள் வாழ்வீர்கள்? ஏன்? புதிய உடன்படிக்கையின் கீழ் நாம் மேன்மையான பயன்களையும் மேன்மையான வாக்குத்தத்தங்களையும் பெற்றிருக்கின்றோம். நிச்சயமாகவே நாம் முதலாம் உடன்படிக்கைக்குத் திரும்பிச் செல்ல விரும்புவதில்லை.

[இந்த இடத்தில், ஒழுக்க ரீதியான கொள்கைகள் நித்தியமானவைகள், மற்றும் புதிய உடன்படிக்கையானது நாம் கொலை செய்யக் கூடாது, விபசாரம் செய்யக் கூடாது, பொய் கூறக் கூடாது முதலியன போன்ற நித்தியமான ஒழுக்கக் கொள்கைகளை நீக்கிப் போடுவதில்லை என்பதை ஆசிரியர் விளக்கப்படுத்த விரும்பலாம். இந்தக் கொள்கைகள் புதிய உடன்படிக்கையில் உள்ளடங்கி இருக்கின்றன, ஆயினும் ஓய்வுநாள் பிரமாணம் இதில் உள்ளடங்குவதில்லை. ஓய்வுநாள் என்பது யூதர்களுக்குச் சிறப்பானதொரு நாளாக, அவர்கள் நினைவுகூர வேண்டிய நாளாக, வேலை எதுவும் செய்யாதிருந்து தாங்கள் எகிப்தில் அடிமைகளாய் இருந்து

விடுவிக்கப்பட்டதை நினைவுகூரவேண்டிய நாளாக இருந்தது (உபா. 5:15). அது படைப்பை நினைவுகூர வேண்டிய நாளாக அர்ப்பணிக்கப் படாதிருந்தது. தேவன் ஏழாம் நாளில் ஓய்ந்திருந்ததால், இஸ்ரவேலர்கள் இளைப்பாறுதலின்றி எகிப்தில் இருந்ததை நினைவுகூருவதற்கு இஸ்ரவேலுக்கு இளைப்பாறுதலின் நாளாக ஏழாம் நாளைத் தேர்ந்து கொண்டார் (யாத். 20:11). ஓய்வுநாளுக்கு அடுத்த நாளான, வாரத்தின் முதல் நாள் (மத். 28:1; மாற். 16:1; லூக். 24:1) கிறிஸ்தவர்கள் கூடிவந்த நாளாக (அப். 20:7), இன்னமும் கூடிவரும் நாளாக உள்ளது. வாரத்தின் முதல் நாளில் கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்பதன் அடிப்படையில் அந்த நாளானது கிறிஸ்தவர்கள் பாவம் மற்றும் மரணம் ஆகியவற்றிலிருந்து தங்கள் விடுதலையை நினைவுகூரும் நாளாக உள்ளது. அவர்களுக்கு இந்த நாள், இஸ்ரவேலர்களின் இளைப்பாறுதலின் நாளாகிய ஓய்வுநாளைப் போல உடலுக்கு ஓய்வளிக்கும் நாளாக இல்லாமல், ஆவிக்குரிய வகையில் ஓய்வு நாளாக உள்ளது.]

இந்தப் பாடத்தில் நாம், ஒரு மக்களினத்தின் மூலமாக அவர்களை மீட்க ஒரு நியாயப்பிரமாணத்தையல்ல, ஆனால் அவர்களுக்கு ஒரு இரட்சகரைக் காண்பித்த தேவனுடைய திட்டத்தையும், சிலுவையில் இயேசுவின் மரணத்தின் மூலமாகவே மனித குலத்தை மீட்பதாகத் தேவன் கொண்டிருந்த திட்டத்தையும் கவனித்தோம்.

## தொகுப்புரை

இந்தப் படிப்பில் நாம் நமது பாவங்களில் இருந்து நம்மை மீட்பதற்கான தேவனுடைய திட்டத்தின் வெளிப்பாடுகளை ஆராய்ந்திருக்கின்றோம். இதுவே வேதாகமத்தின் ஆய்வுப் பொருளாக உள்ளது.

இப்பாடத்தின் முக்கிய கேள்விகளுக்குப் பதில் அளித்தல் என்பது இந்தப் பாடத்தைத் தொகுத்துரைப்பதற்கான நல்லதொரு வழியாக உள்ளது.

I. *தேவன் ஆபிரகாமுக்கு வெளிப்படுத்திய திட்டம் என்ன?* தேவன் ஆபிரகாமை ஒரு பெரிய இனமாக்குவார் (பழைய ஏற்பாட்டின் ஆய்வுப் பொருள்) என்பதையும் ஆபிரகாமின் சந்ததியின் மூலம் அதாவது, இயேசுவின் மூலம் எல்லா இனங்களையும் ஆசீர்வதிப்பார் (புதிய ஏற்பாட்டின் ஆய்வுப் பொருள்) என்பதையும் ஆபிரகாம் அறியச் செய்தார்.

II. *அந்த மாபெரும் இனம் எவ்வாறு வளர்ச்சியடைந்தது?* ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு ஆகியோரின் சந்ததியார் எகிப்திற்குச் சென்ற 70 பேரில் இருந்து எகிப்தில் ஒரு மாபெரும் மக்களினமாக வளர்ந்தனர், அவர்கள் மோசே மற்றும் ஆரோனின் தலைமையின் கீழ் எகிப்தை விட்டுப் புறப்பட்ட போது முப்பது முதல் ஐம்பது லட்சம் வரை எண்ணிக்கை கொண்ட மக்கள் கூட்டமாயினர், அதில் 6,03,550 யுத்த வீரர்களும், ஆசாரியத்துவக் கூட்டமான லேவிகோத்திரத்தில் 22,000 ஆண்களும் இருந்தனர்.

III. *இஸ்ரவேல் இனத்திற்குச் சட்டமாயிருந்தது என்ன?* இஸ்ரவேலரின் நாட்டில் அவர்கள் ஒரு இனம் என்ற வகையில் கடைப்பிடிக்க வேண்டிய

*சட்டத்தை தேவன் அவர்களுக்குச் சீனாய் மலையில் கொடுத்தார். உடன்படிக்கை (அவர்களுடன் தேவனுடைய ஒப்பந்தம்) என்பதும் அவர்களுடைய சட்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது (ரோமர் 13:8-10). தேவனுடனான இந்த ஒப்பந்தத்தை அவர்கள் கடைப்பிடித்தால், அந்நாட்டில் அவர்கள் வளத்துடன் நீடிய காலம் வாழ்வார்கள், ஆனால் உடன்படிக்கையை அவர்கள் மீறினால், அந்த நாட்டிலிருந்து அவர்கள் துரத்தப்பட்டு, மற்ற இனங்களின் மத்தியில் சிதறடிக்கப்படுவார்கள்.*

IV. *முதலாம் உடன்படிக்கையில் இருந்த பிரச்சனை என்ன?* நியாயப் பிரமாணத்தின் கீழ் இருந்தவர்கள் அதைக் கடைப்பிடிக்காத காரணத்தினால், நியாயப்பிரமாணம் அவர்களை சாபம், ஆக்கினைத் தீர்ப்பு மற்றும் மரண தண்டனையின் கீழ்க் கொண்டு வந்தது. அது இரக்கம் காட்டவில்லை என்பதே இதற்குக் காரணம் என்பதால் இது உண்மையாக உள்ளது.

V. *இரக்கம் காட்டுவதற்குத் தேவன் என்ன செய்வார்?* தேவன் இரக்கத்தை அளிக்கின்ற ஒரு புதிய உடன்படிக்கையை, ஒரு புதிய ஒப்பந்தத்தைக் கொண்டு வந்தார். இயேசுவின் மரணத்தின் மூலமாக, முதல் உடன்படிக்கையின் சாபம் எடுத்துப் போடப்பட்டது, ஒரு புது உடன்படிக்கை உறுதிப்படுத்தப்பட்டு, முதல் உடன்படிக்கை புறம்பே எடுத்துப் போடப்பட்டது. முதலாம் உடன்படிக்கைக்குப் பதிலாக இரண்டாம் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது, இது மேன்மையான உடன்படிக்கையாகவும், மேலான வாக்குத்தத்தங்களின் மீது கட்டி யமைக்கப்பட்டதாகவும் (நாட்டில் வளமான நீடிய ஆயுள் என்பதற்குப் பதிலாக பரலோகத்தில் நித்திய ஜீவன்) இருக்கின்றது.

இன்றைய நாட்களில் நாம் புது உடன்படிக்கையின் நிபந்தனைகளின் படி வாழ வேண்டியவர்களாய் இருக்கின்றோம். நாம் முதலாம் உடன்படிக்கையின் கீழ் திரும்பிச் செல்ல விரும்புவதில்லை, ஏனெனில் அதன் கீழ் வாழ முயற்சித்தவர்கள் ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டு, நியாயப் பிரமாணத்தின் சாபத்தின் கீழ் இருந்தனர். இதற்கு மாறாக, நாம் இரண்டாம் உடன்படிக்கையின் கீழ் இருக்கின்றோம். ஏனென்றால் இதன் மூலம் நாம் கிருபை, இரக்கம் மற்றும் பரலோகத்தில் நித்திய ஜீவனின் நம்பிக்கை ஆகியவற்றைப் பெறுகின்றோம்.

இந்தப்பாடம் பல விஷயங்களை நாம் புரிந்து கொள்ள நமக்கு உதவுகின்றது: (1) கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாட்டின் சட்டங்களைக் கடைப்பிடிக்காததற்கான காரணம்; (2) கிறிஸ்தவர்கள் சனிக்கிழமையில் அதாவது ஓய்வுநாளில் இளைப்பாறி இராததற்கான காரணம்; (3) இயேசுவின் மரணத்திற்குப் பிறகு உண்டான மனமாற்றங்கள், மக்கள் கிறிஸ்தவர்களாவது எப்படி என்பதற்கான எடுத்துக்காட்டுகளாகக் கருதப்பட வேண்டியதற்கான காரணம்; மற்றும், (4) கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வது எப்படி என்பதைக் கற்றுக் கொள்வதற்குக் கிறிஸ்தவர்கள் புதிய ஏற்பாட்டைப் படிக்கும் காரணம்.

[பாடத்தைத் தொகுத்துரைத்த பின், மாணவர் நியாயப் பிரமாணத்தைப் படித்திருந்து அதில் போதிக்கப்பட்டுள்ள எல்லாவற்றிற்கும்

கீழ்ப்படிய வேண்டும் என்று கருதினால், மற்றும் அவர் நியாயப் பிரமாணத்தில் பாவமன்னிப்புக்குச் செய்ய வேண்டியது என்ன என்பதையும் புதிய உடன்படிக்கையில் பாவமன்னிப்புக்காகச் செய்ய வேண்டியது என்ன என்பதையும் படித்திருந்தால், ஆசிரியர் நியாயப் பிரமாணம் பற்றி மாணவரின் எண்ணப்போக்கினைக் குறித்துக் கேட்கலாம்;

ஆசிரியர் அடுத்த பாடமானது பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு ஆகியவற்றில் பாவமன்னிப்பு பற்றி யோசனை தரும் என்று கூறி அதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.]